**கவனிக்க.**- *2007.1.26 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1483 - 2007 පෙබරවාරි 02 වැනි සිකුරාදා - 2007.02.02**

*1483 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 66 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | - |
| அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 67 |
| நானாவித அறிவித்தல்கள் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, பெப்புருவரி 09 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, சனவரி 26 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

இலங்கைப் புகையிரதப் பகுதிக்கு 100,000 கடின மரத்தினாலான சிலீப்பர் கட்டைகளை (100,000 Nos. Hardwood Sleepers) வழங்குவதற்கான கேள்விகள்

கேள்வி இல. எஸ். ஆர். எஸ்./எவ். 6491

தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்வனவுக் குழுவினால் 100,000 கடின மரத்தினாலான சிலீப்பர் கட்டைகளை (100,000 Nos. Hardwood Sleepers) வழங்குவதற்கான விலைமனுக்கள் விநியோகத்தர்களிடமிருந்தும் அல்லது இலங்கையிற் பதிவுசெய்யப்பட்டவர்களும், அதிகாரத் தத்துவம் பெற்றவர்களுமான அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்தும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

2. மீளப்பெறப்பட முடியாத கேள்விப்பணமாக ரூபா 10,000 ஐ அல்லது அதற்குச் சமமான இலகுவாக மாற்றீடு செய்யக்கூடிய தொகையைச் செலுத்துவதன் மூலம் புகையிரதக் களஞ்சிய அத்தியட்சர் அலுவலகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10 இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களிலிருந்து 2007.01.18 ஆந் திகதியிலிருந்து 2007.02.14 ஆந் திகதி வரையிலான சாதாரண வேலை நாட்களில் முற்பகல் 9.30 மணி நேரத்திற்கும் பிற்பகல் 15.30 மணி நேரத்திற்கும் இடைப்பட்ட நேரத்தில் (இலங்கை நேரம்) பெறப்படும் கேள்விப்பத்திரங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. கேள்விகள் 2007.03.02 ஆந் திகதி பிற்பகல் 14.00 மணி நேரத்திற்கு (இலங்கை நேரம்) மூடப்படும். சீலிடப்பட்ட கேள்விகளை பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிப்பதன் மூலமாகவோ பின்வரும் முகவரியிற் சமர்ப்பிக்கலாம் :-

தலைவர்,<br>
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்வனவுக் குழு,<br>
மே./பா. செயலாளர், புகையிரதப் போக்குவரத்து அமைச்சு,<br>
இல. 1, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,<br>
கொழும்பு 10, இலங்கை.

புகையிரத போக்குவரத்து அமைச்சு அல்லது புகையிரத திணைக்களம் பதிவுத்தபாலின் தாமதத்திற்கு பொறுப்பேற்க மாட்டாது.

4. மேலே பந்தி (03) இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் கேள்விகள் திறக்கப்படும். கேள்வி ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விகள் திறக்கப்படும்போது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. கேள்விப்பத்திர ஆவணங்களை எந்தவித கட்டணங்களுமின்றி புகையிரதக் களஞ்சிய அத்தியட்சர் அலுவலகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10 இலங்கையில் பரிசீலிக்கலாம்.

6. மேலதிக விபரங்களுக்குத் தயவுசெய்து பின்வரும் முகவரியிற் தொடர்புகொள்ளவும் :-

புகையிரதக் களஞ்சிய அத்தியட்சர்,<br>
புகையிரதக் களஞ்சிய திணைக்களம்,<br>
ஒல்கொட் மாவத்தை,<br>
கொழும்பு 10,<br>
இலங்கை.<br>
தொலைபேசி இலக்கங்கள் : 94 (11) 2432044 அல்லது 94 (11) 2436818.

தொடர்பு இலக்கம் : எஸ். ஆர். எஸ்./எவ். 6491.

தலைவர்,<br>
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்வனவுக் குழு.

2-163

# ஏல விற்பனைகள்

## மக்கள் வங்கி-வத்துகாமம் கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

**மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், பாத்ததும்பறை பல்லேகம்பஹா பத்துவெ வத்துகாமத்தில் அமைந்துள்ள கெதர கும்புர வத்த என்றழைக்கப்படும் காணியை உத்தரவுபெற்ற நில அளவையாளரான டி. பி. எஸ். சங்கரதெனிய அவர்களால் இடைப்பிரித்தலாக அளந்து தயாரிக்கப்பட்ட 4096 ஆம் இலக்கங்கொண்ட 2004.01.02 ஆந் திகதிய மூல வரைவுபடத்தின் 4பீ இலக்கங்கொண்ட ஒரு றூட் பத்து பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 10பே.) விசாலமுள்ள காணியும் அதற்குள்ளே அமைந்துள்ள கட்டிடங்களும் ஏல விற்பனை**

மக்கள் வங்கி மூலம் எமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் எங்களால் 2007.02.26 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு பிரசித்த ஏலத்தில் ஆதனம் அமைந்துள்ள இடத்திலேயே விற்பனை செய்யப்படும்.

2005.10.28 ஆந் திகதிய அரச வர்த்தமானியிலும் 2005.10.14 ஆந் திகதிய "டெயிலி நியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கும் ஏலவிற்பனைத் தீர்மான அறிவித்தலுக்குக் கவனம் செலுத்தவும்.

**ஆதனத்திற்கு நுழையும் வழி.**- வத்துகாமம் நகரத்திலிருந்து உடுராவன பாதையில் நகரசபை விளையாட்டு மைதானத்தை தாண்டிய உடன் வலதுபக்கத்தில் மேற்கூறப்பட்ட ஆதனம் அமைந் துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- ஏலவிற்பனையின் இறுதியின் போது ஒரு சிறந்த கொள்வனவாளர் மூலம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் ஒரு பணத்தொகையைச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) மாகாண அதிகார சபையின் குத்தகைக்கான பணம் 1% ;
(3) ஏலதாரரின் தரகுக் கட்டணமாக விற்பனை விலையில் 2.5% ;
(4) எழுதுவினைஞர் அறிவித்தல் கட்டணமாக 500 ;
(5) விற்பனைச் செலவும், ஏனைய கட்டணங்கள் இருப்பின் அத்தொகையும், கொள்வனவு விலையில் மிகுதியாகிய 90% ஆகிய தொகையும் விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மக்கள் வங்கி கண்டி பிரதேச பிரதான அலுவலகத்தில் பிரதேச முகாமையாளருக்கு செலுத்த வேண்டும். தொலைபேசி இலக்கம் : 081-2234283 ; தொலைநகல் இலக்கம் : 081-2223017.

உரிமை ஒப்பனைகளும், ஏனைய அதற்குரிய விபரங்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தொகை 30 நாட்களுக்குள் செலுத்தாவிட்டால், தற்போது செலுத்தப்பட்டுள்ள கொள்வனவு விலையில் 10% தொகையை மீண்டும் செலுத்தாமல் விடுவதற்கும், மீண்டும் ஆதனத்தை விற்பனை செய்யும் உரிமையும் மக்கள் வங்கிக்கு உண்டு.

ஷொக்மன் மற்றும் சமரவிக்ரம,
இலங்கையில் முன்னணியில் திகழும்
உத்தரவுபெற்ற ஏலதாரர்கள்
(அரச, தனியார் வங்கியாளர்களுக்காகவும்),
மற்றும் நீதிமன்ற ஆணையாளர்களுக்காகவும்.

| | |
|---|---|
| *பிரதான அலுவலகமும் காட்சி அறையும்* | *புதிய நகர அலுவலகமும் ஏலவிற்பனை மண்டபமும்.* |
| 24, டொரிங்டன் பாதை கண்டி | இல. 290, ஹவ்லொக் பாதை, கொழும்பு |
| தொலைபேசி : 081-2224371 081-2227593 | தொலைபேசி இல. 011-2585408, 011-2502680 |
| தொலைநகல் : 081-2224371 | தொலைநகல் : 011-2588176 |
| | E-mail : Sameera@Sri lanka net |

2-100

---

## செலான் வங்கி லிமிட்டெட் - பாணந்துறைக் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், றைகம் கோறளை முன்வத்தபாகே பத்து, பறகஸ்தொட்டவில் அமைந்துள்ள கொன்னகஹவத்த அல்லது புவக்வத்த என்றழைக்கப்படுகின்ற அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். ஆர். ஜயசேகரவினால் அளந்து எல்லைகள் வரையறுக்கப்பட்ட வரைவு இல. 347 மற்றும் 1998.02.02 ஆந் திகதி கொண்ட துண்டு இல. பீ உடைய ஒரு ஏக்கர் (1ஏ. 0றூ. 0பே.) பரப்பளவு கொண்ட பெறுமதி வாய்ந்த காணி ஏல விற்பனை**

**(இக்காணி பாகம்/பிரிவு டி 91/279 இன்கீழ் பாணந்துறை காணிப் பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.)**

*(கடன்பட்டார் என்ற வகையில் வாதுவையில் அமைந்தள்ள தீபாளி தொழிற்சாலையின் பங்குதாரர்களான ஹெட்டி கன்கானம்கே மஹீபால பெரேரா மற்றும் ஹெட்டி கன்கானம்கே கீர்திபால பெரேரா ஆகியோருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி லிமிட்டெட்டிற்கு ஈடுவைக்கப்பட்ட காணி).*

மேலே விபரிக்கப்பட்ட காணியை நான் 2007 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

**மேலதிக விபரங்களுக்கு.**- தயவுசெய்து 200606.09 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2006.04.27 ஆந் திகதிய "டெயிலி மிரர்" மற்றும் "லங்காதீப" மற்றும் 2006.05.11 ஆந் திகதிய "வீரகேசரி" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணியைச் சென்றடைகின்ற வழி**.- மொறட்டுவையிலிருந்த மில்லனிய வீதியூடாக சுமார் 2.5 கி. மீ. வரை சென்று பரகஸ்தொட்ட சந்தியைச் சென்றடைந்து பின்னர் மீண்டும் 100 மீற்றர் வரை பிரதேச சபை செம்மண் வீதியில் இடது பக்கமாக சுமார் 300 மீற்றர் வரை சென்று 20 அடி அகலமான பாதையில் வலது பக்கமாக அமைந்துள்ள குறித்த காணி வரைவில் உள்ளவாரான குறித்த காணியை சென்றடையலாம்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை**.- வெற்றிகரமான கொள்வனவு தாரர் ஏலவிற்பனை முடிவில் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%), விற்பனைவரியாக உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்த வேண்டியது ஒரு வீதம் (1%), ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2%), விற்பனை நிலத்துக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000, இலிகிதர் மற்றும் கூவுவோர் கூலி ரூபா 500, விற்பனையின்பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு.

கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி லிமிட்டெட்டில் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களைக் "கொழும்பு 3, காலி வீதி, இல. 90, செலான் வங்கி லிமிட்டெட், பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்)" இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 011-2456258, 2456263, 2456284,

துசித கருணாரத்ன (ச. நீ),
அனுமதிபெற்ற ஏலதாரர்
நீதிமன்ற ஆணையாளரும் மதிப்பீட்டாளரும்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி இல. : 2696155, 2572940

2-64

---

## வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

### ஆதனங்களின் ஏல விற்பனை

கணக்கு இல. : 0002 5005 5218 –டபிள்யூ. எல். எல். ரத்னசீலி மற்றும் பி. வி. ரி. பெர்னாந்து

2007.01.26 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் 2006.10.05 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" தினசரி செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் 2005.01.20 ஆந் திகதியிடப்பட்ட வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய ஏழு இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து முன்னூற்றிருபத்தைந்து ரூபா பதினொரு சதம் (ரூ. 7,89,325.11) ஐ மேலும் 2004, ஒற்றோபர் 21 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை ஆறு இலட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து நாற்பத்தைந்து ரூபா எழுபது சதம் (ரூ. 6,98,045.70) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பன்னிரண்டு தசம் ஒன்று (12.1%) சதவீதமான வட்டியுடனும் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களைக் கண்டியைச் சேர்ந்த ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களால் 2007.02.21 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு சொத்து அமைந்த இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோரளையின் தாசியபத்துவில் மினுவாங்கொடை பிரதேச சபை எல்லையினுள் நெதகமுவவில் அமைந்த களபடவத்த என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். பி. என். சந்தகிரி அவர்களால் தயாரிக்கப்பட்டு 2001, திசெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட நில அளவை வரைபடம் இல. 436A இல் குறிப்பிடப்பட்டு பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட துண்டு 2D என அடையாளமிடப்பட்ட முழு காணித்துண்டு அதன்கண் அமைந்த மரங்கள், பயிர்கள் கட்டிடங்கள் மற்றும் சகலதுடன் மேற்கூறப்பட்ட துண்டு 2D காணியின் எல்லைகளான– வடக்கில் : துண்டு 2C ; கிழக்கில் : யூ. டயஸ் அவர்களுடைய காணி ; தெற்கில் : பெருந்தெரு, அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான தெரு ; மேற்கில் : துண்டு 2C என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 436A இற்கமைய இந்தக் காணி பதினாறு தசம் இரண்டு இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 16.22பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி கொழும்பு காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் A258/250 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

2-144

---

## இலங்கை வங்கி

1968 ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்

### சொத்து, நிலமனை ஏல விற்பனை

இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2004.10.22 ஆந் திகதிய 1364 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 2004.10.11 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 474, பிட்டகோட்டை, கோட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. ஆர். எஸ். மஹாநாம 2007.02.24 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை மெதபற்றுவில் அத்தனகல்ல பிரதேச சபை எல்லைகளுள் கொஸ்கந்தவல கிராமத்தில் அமைந்த "ஹொரகஹலந்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் யூ. எம். ஆரியசேன தயாரித்த 1996, மே 25 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 645 இல் விபரித்த துண்டு பீ3 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு– வடக்கில் : துண்டு பீ2 உம் ; கிழக்கில் : வரைபடம் இல. 756 இல் துண்டு 1 இன் மீதிப்பாகமும் ; தெற்கில் : றோட்டும் ; மேற்கில் : பிரதேச சபை றோட்டும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 645 இன்படி இருபத்தைந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 25பே.) அல்லது ஹெக்டெயர்கள் சைபர் தசம் சைபர் ஆறு மூன்று மூன்று (ஹெக். 0. 0633) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டு கீழே விபரித்த காணியிலிருந்து பிரிக்கப்பட்ட குறித்த பகுதியாகும் :-

மேற்குறிப்பிட்ட கொஸ்கந்தவலயில் அமைந்த "ஹொரகஹலந்த" என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் யூ. எம். ஆரியசேன தயாரித்த 1995, செத்தெம்பர் 17 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 474 இல் துண்டு பீ என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு– வடக்கில் : துண்டு ஏ உம் ; கிழக்கில் : வரைபடம் இல. 756 இல் துண்டு 1 இன் மீதிப்பாகமும் ; தெற்கில் : றோட்டும் ; மேற்கில் : பிரதேச சபை றோட்டும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 474 இன்படி ஒரு றூட் முப்பது பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 30பே.) அல்லது ஹெக்டெயர்கள் சைபர் தசம் ஒன்று ஏழு ஏழு ஒன்று (ஹெக். 0. 01771) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது கம்பஹா காணிப்பதிவகத்தில் ஈ 450/ 184 இல் பதிவுசெய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

ஜே. எம். ஏ. ஆரியரட்ன,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
கம்பஹா மேற்தரக் கிளை.

2–156

---

### இலங்கை வங்கி

*1968 ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

### சொத்து, நிலமனை ஏல விற்பனை

கடன் தொடர்பு இல. 261/ 2000

இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2006.10.13 ஆந் திகதிய 1467 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 2006.10.09 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப் பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 56, பன்னல றோட், குருநாகலை என்னும் முகவரியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர்கள் திரு. ஜே. அல்பியஸ் பெரேரா 2007.03.29 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

1. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேஉடவில்லி ஹத்பத்து, திரகந்தாஹே கோரளையில் குருநாகல் மாநகர சபை எல்லைகளுள் பொல்லத்தபிட்டியவில் அமைந்த பொல்லத்த பிட்டியேவத்த மறுபெயர் சீவக்கவெவ என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் சரத் வெலகெதர தயாரித்த 1999.12.02 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 3645 இல் துண்டு 6 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு– வடமேற்கிலும் வடகிழக்கிலும் : வரிமதிப்பிலக்கம் 35, காமினி பெரேரா உரிமை கோரும் காணியும் ; கிழக்கில் : குணசிரி உரிமைகோரும் காணியும் ; தென்மேற்கிலும் தென்கிழக்கிலும் : பியசிங்ஹ உரிமைகோரும் காணியும் எனினும் மிகவும் சரியானது ; தென்மேற்கில் : துண்டு 7 உம் ; மேற்கில் : 15 அடி அகலப் பாதைக்கென குறிப்பிடப்பட்ட துண்டு 3 உம் எல்லைகளாகக் கொண்டு ஒன்பது தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 9.5பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபடத்தின் துண்டு 3 என விபரித்த பொதுப் பாதையை வழியாக உபயோகிப்பதற்கும் நிர்வகிப்பதற்குமான உரிமையும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் ஏ 1420/137 இல் பதிவுசெய்யப்பட்டது.

2. மேற்குறிப்பிட்ட பொல்லத்தபிட்டியவில் அமைந்த பொல்லத்த பிட்டியவத்த மறுபெயர் சிவக்கவெவ என அழைக்கப்படும் காணியின் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3645 இல் துண்டு 7 என அடையாள மிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு– வடகிழக்கிலும் வடமேற் கிலும் : வரிமதிப்பிலக்கம் 35, காமினி பெரேரா உரிமை கோரும் காணியும் எனினும் மிகவும் சரியானது வடகிழக்கில் : மேற் குறிப்பிட்ட வரைபடம் இல. 3645 இல் துண்டு 6 உம் ; தென்மேற்கிலும் தென் கிழக்கிலும் : எம். பியசிங்ஹ உரிமைகோரும் காணி எனினும் மிகவும் சரியானது ; தென்கிழக்கில் : கால்வாய் ஒன்றென விபரித்த துண்டு 8 உம் ; தென்மேற்கில் : எம். பியசிங்ஹவின் காணியும் ; மேற்கில் : கால்வாய் ஒன்றென விபரித்த துண்டு 9 உம் 15 அடி அகலப் பாதைக்கென விபரித்த துண்டு 3 உம் எல்லைகளாகக் கொண்டு எட்டு தசம் மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 8.3பே.) பாதைக்கென விபரித்த துண்டு 3 உம் எல்லைகளாகக் கொண்டு எட்டு தசம் மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 8.3பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 3 என விபரித்த பொதுப்பாதையை வழியாக உபயோகிப்பதற்கும் நிர்வகிப்பதற்குமான உரிமையும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவ கத்தில் ஏ 1420/ 138 இல் பதிவுசெய்யப்பட்டது. விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். அத்துடன் மேற்குறிப் பிட்ட வரைபடத்தில் துண்டு 3 என விபரித்த பொதுப்பாதையை வழி யாக உபயோகிப்பதற்கும் நிர்வகிப்பதற்குமான உரிமையும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் ஏ 1420/138 இல் பதிவுசெய்யப் பட்டது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

ஈ. ஜி. ஜயவீர,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
2 ஆம் நகரக் கிளை,
குருநாகல்.

2–157

**வரையறுக்கப்பட்ட செலான் வங்கி - கம்பஹா கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏலவிற்பனை*

**மிகவும் பெறுமதிமிக்க சகல வசதிகளையும் கொண்ட ஆதனம் ஏல விற்பனை**

**கம்பஹா பிரதேச சபை ஹேனரத்கொட உப அலுவலகம் எல்லைக்குள் மொரகொட ஊரில் பண்டாரநாயக மாவத்தை முன் அமைந்துள்ள கொன்னகஹ வத்தை எனும் பெயரில் அமைந்துள்ள பிரித்த பகுதியும் மற்றும் சகல வசதிகளையும் கொண்ட கட்டிடம் உட்பட சகல இடத்தின் பரப்பளவு 42.03 பர்ச்சஸ் ஆகும்.**

*(கம்பஹாவைச் சேர்ந்த பட்டியகே சஹன் பிரஷாத் என்பவர் கடப்பாடுடையவராக வரையறுக்கப்பட்ட செலான வங்கியினுள் பெறப்பட்ட கடன் வசதிகளுக்காக வங்கியில் ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம்.)*

*2007 ஆம் வருடம் பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு ஆதனம் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

**இடத்திற்கு உட்பிரவேசிக்க.**- *கம்பஹா நகர மத்தியிலிருந்து ஒருகொட பாதை மைல் 1 1/4 மட்டும் செல்லும்போது பண்டாரநாயக்க மாவத்தைக்கு திரும்பி இந்த பாதையின் 600 யார் மட்டும் செல்லும்போது வலதுக்கு மணல் பாதை 300 யார் சென்ற பின் இதே பாதையில் வலதுக்கு பாதை எல்லையில் அந்த ஆதனம் உள்ளது.*

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- *2006.09.08 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2006.10.10 ஆந் திகதிய "லங்காதீப", "டேலி மிரர்" மற்றும் 2006.10.20 ஆந் திகதிய "வீரகேசரி" பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- *விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் :-*

*கொள்முதல் விலையில் 10% உள்நாட்டு வரி 1 %, ஏலவிற்பனையார் கட்டணம் 2 1/2%, நொத்தாரிஸ் கட்டணம் ரூ. 2,000, இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500 சகல பகிரங்கப்படுத்தல் செலவு.*

*கொள்முதல் மிகுதி 90% விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட சேலான் வங்கியில் செலுத்தப்படுதல் வேண்டும்.*

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- *"பிரதான முகாமையாளர் (சட்டம்), வரையறுக்கப்பட்ட செலான் வங்கி, 'செலின்கோ செலான் கட்டிடம்', இல. 90, காலி வீதி, கொழும்பு 3" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. -011-4701256, 011-2456258, 077-7736452*

*ஐ. டபிள்யு. ஜயசூரிய,*
*நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினல் உத்தரவாதம் பெற்ற ஏலவிற்பனையாளர்.*

*இல. 83/5, போமலுவ பாதை,*
*வட்டபுலுவ,*
*கண்டி.*
*தொலைபேசி இல. : 081-2211025, 071-4755974, 071-4213497, 071-2755974*
*பெக்ஸ் இல. : 081-2211025*

*2-132/1*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 4.45 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|
| (அ) I வது பகுதி | 31.00 | 5.00 |
| II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) I வது பிரிவு | 10.00 | 5.00 |
| II வது பிரிவு | 12.00 | 5.00 |
| III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டுருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.-*** *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை-2007**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 02.02.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.01.2007 |
| | | வெள்ளி | 09.02.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.01.2007 |
| | | வியாழன் | 15.02.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.02.2007 |
| | | வெள்ளி | 23.02.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.02.2007 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 02.03.2007 | .. | நண்பகல் 12 | வியாழன் | 15.02.2007 |
| | | வெள்ளி | 09.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.02.2007 |
| | | வெள்ளி | 16.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.03.2007 |
| | | வெள்ளி | 23.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.03.2007 |
| | | வெள்ளி | 30.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.03.2007 |
| **ஏப்பிறல்** | .. | வியாழன் | 05.04.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.03.2007 |
| | | வியாழன் | 12.04.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.03.2007 |
| | | வெள்ளி | 20.04.2007 | .. | நண்பகல் 12 | வியாழன் | 05.04.2007 |
| | | வெள்ளி | 27.04.2007 | .. | நண்பகல் 12 | வியாழன் | 12.04.2007 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2007, சனவரி 01.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.